**1. தலைப்பு 254 - பதிவாளர் நாயகத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 254 – பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், ஏடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 யூன் 29 ஆந் திகதி திணைக்களத்தின் பதிவாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2 கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

---

திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,325.20 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 1,272.04 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 53.16 மில்லியன் அதாவது 4.01 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| மீண்டெழுபவை | 1,261.20 | 1,217.45 | 43.75 | 3.47 |
| மூலதனம் | 64.00 | 54.59 | 9.41 | 14.70 |
| மொத்தம் | 1,325.20 | 1,272.04 | 53.16 | 4.01 |

**(ஆ) ஏனைய அமைச்சினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு**

உரித்துக்களைப் பதிவு செய்யும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக திணைக்களத்திற்கு காணி, காணி அபிவிருத்தி அமைச்சினால் ரூபா 18.0 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 14.2 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்டிருந்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 3.8 மில்லியன் அதாவது 21 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 வருமானக் கணக்குகள்

திணைக்களத்தினால் 2015 ஆம் ஆண்டிற்காக 02 வருமானக் குறியீடுகளுக்காக ரூபா 1,425.0 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 1,143.0 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 80 சதவீதமாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமானக் குறியீடு | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | பற்றாக்குறை மதிப்பீட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | பற்றாக்குறை | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 10.03.07.02 | 1,400.00 | 1,129.03 | 270.98 | 19.36 |
| 10.03.08.00 | 25.00 | 14.44 | 10.56 | 42.24 |
| **மொத்தம்** | **1,425.00** | **1,143.47** | **281.54** | **19.76** |

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 25401 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியான வை | அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 70.00 | 58.71 | 40.00 | 54.95 | 230.00 | 176.81 |

## 2.4 கட்டுநிதிக் கணக்கு

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திணைக்களத்தின் கீழ் 7002/0000/00/0114/0015/000 ஆம் கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 11.74 மில்லியனாக இருந்தது.

## 2.5 பொது வைப்புக் கணக்குகள்

திணைக்களத்தின் கீழ் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 0.288 மில்லியன் ஆக இருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 000/0000/00/0001/0107/000 | 0.275 |
| 0000/0000/00/0018/0099/000 | 0.013 |
| | 0.288 |

## 2.6 கணக்காய்வு அவதானிப்புக்கள்

பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில்

குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்பட்டிராமை

திணைக்களத்தால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன், விடுமறைப் பதிவேடு நாளதுவரையாக்கப்படாதிருந்தமை தெரிவுப் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | திணைக்கள ஒதுக்கீட்டு (வாக்குப்பண) செலவினப் பேரேடு | நிதிப் பிரமாணம் 447 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் உள்ளடக்கப்படும் வகையில் 138 ஆவது பொது மாதிரி |
| (இ) | கடமை தொலைபேசி பதிவேடு | நிதிப்பிரமாணம் 845(1) இன் பிரகாரம் 26 ஆம் பிரிவு |
| (ஈ) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) |
| (உ) | எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிகள் இருப்புப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(ஈ) |
| (ஊ) | கொள்வனவுக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் வருகைப் பதிவேடு | 2006 அரச கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 2.11.2 வழிகாட்டல் பேணப்பட்டிருக்கவில்லை. |

### 3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

நிதிப் பிரமாணம் 272(2) இன் பிரகாரம் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாத ரூபா 98,477,281 கூட்டுப்பெறுமதியான 112 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் காணாமல் போயிருந்ததுடன் அக்கொடுப்பனவுகளின் தன்மை தொடர்பான விபரங்கள் மற்றும் கொடுப்பனவை உறுதிப்படுத்தும் சான்றுகள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### பாதீட்டு முரண்கள்

18 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்டமை காரணமாக ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்புக்கள் அச் செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டின் 12.67 சதவீதத்திலிருந்து 87.64 சதவீதம் வரையான வீச்சளவைக் கொண்டிருந்தன.

## 3.4 வருமானக் கணக்குகள்

-----------------------------------------

திணைக்களத் தலைவர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 02 வருமான குறியீட்டின் கீழ் வருமான மதிப்பீடுகளைத் தயாரித்தல், வருமானங்களைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பித்தல் போன்ற செயற்பாடுகள் கையளிக்கப்பட்டிருந்தன. அவ்வருமானக் குறியீட்டிற்குரித்தாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) வருமானக் குறியீட்டு இலக்கம் 10.03.07.02 - பதிவுசெய்தல் கட்டண வருமானக் கணக்கு.

------------------------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் வருமானக் குறியீட்டிற்குரிய ரூபா 1,400 மில்லியன் வருமானத்தை சேகரிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 1,129 மில்லியன் தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 80 சதவீதமாக இருந்தது. மதிப்பிடப்பட்ட வருமான இலக்கை அடைந்துகொள்ள முடியாமை தொடர்பாக திணைக்களத்தினால் திருத்திய வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரச நிதிக் கொள்கை திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த சான்றுறுதிப்படுத்தப்பட்ட வருமானக் கணக்கின் பிரகாரம் ரூபா 7,975,807 கூட்டுத்தொகையான வருமானம் நிலுவையாக இருந்ததுடன், அது தொடர்பாக காலப்பகுப்பாய்வொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) நிதிப் பிரமாணம் 128(2)இன் பிரகாரம் வருமானக் குறியீட்டிற்குரிய அரையாண்டு நிலுவை வருமானம் தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) முன்னைய ஆண்டின் ரூபா 6,519,632 ஆன நிலுவை வருமானம் அதே வகையில் மீளாய்வாண்டின் நிலுவை வருமானமாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்ட மற்றும் பதிவழிக்கப்பட்ட ரூபா 4,995,624 தொகையான மொத்தப் பெறுமதி எந்த ஆண்டிற்குரியதென இனங்காண முடியாமல் இருந்தது. அந்தந்த ஆண்டுகளுக்காக அறவிடப்பட வேண்டிய நிலுவை தொகைகளை வெவ்வேறாக இனங்காணக்கூடிய வகையில் முறையான அறிக்கை பேணப்படாமை அதற்கான காரணமாக இருந்தது.

(v) காணிப் பதிவாளர் அலுவலகங்களின் நிலுவைத் தொகை மற்றும் தண்டப் பணம் என்பன உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய வருமானமொன்றாக இருந்த போதிலும், மீளாய்வாண்டில் விதிக்கப்பட்ட நிலுவைத் தொகை மற்றும் தண்டப் பணத்தில் ரூபா 4,177,921 தொகையில் அறவிடப்பட்ட மற்றும் பதிவழிக்கப்பட்ட ரூபா 3,568,286 தொகையை சீராக்கப்பட்டதன் பின்னர் எஞ்சிய ரூபா 609,635 தொகை மீளாய்வாண்டின் பெறவேண்டிய நிலுவை வருமானத்திற்கு உள்ளடக்கப்பட்டிருந்தது.

(vi) காணி பதிவாளர் அலுவலகங்களிலிருந்தும் பிரதேச செயலகங்களிலிருந்தும் மாதாந்த அறிக்கை நிர்ணயிக்கப்பட்ட விதத்தில் கொண்டு வரப்படாமையால் மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 1,154,990,220 ஆன மொத்த வருமானத்தின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

**(ஆ) வருமானக் குறியீடு 10:03:08:00 – நொத்தாரிஸ்களுக்கு வருடாந்த உயர் நீதிமன்றச் சான்றிதழ்கள் வழங்கல் கட்டணம்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நடைமுறைக்கேற்றவாறு வருமானம் எதிர்வுகூறப்பட்டு வருமான இலக்கை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், முன்னைய ஆண்டில் ரூபா 17.6 மில்லியனான தேறிய வருமானம் மற்றும் 12,243 பதிவுசெய்யப்பட்ட நொத்தாரிஸ்களின் எண்ணிக்கை தொடர்பாக கருத்திற் கொள்ளப்படாமல் மீளாய்வாண்டில் ரூபா 10 மில்லியன் ஆன ஆரம்ப மதிப்பீடொன்று திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் திறைசேரியினால் வருமான மதிப்பீடு ரூபா 25.0 மில்லியன் வரை பின்னர் திருத்தம் செய்யப்பட்டிருந்தது.

(ii) வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் வருமானக் குறியீட்டிற்குரித்தாக ரூபா 25.0 மில்லியன் வருமானமொன்றை சேகரிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 14 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்ததுடன், அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 56 சதவீதமாக இருந்தது. அதன் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட வருமான இலக்கை அடைய முடியாதிருந்தது.

(iii) முன்னைய ஆண்டிற்காக நியமனம் செய்யப்பட்ட 12,243 நொத்தாரிஸ்களிடமிருந்து அறவிடப்பட்ட தேறிய நொத்தாரிஸ் கட்டண வருமானம் ரூபா 17,585,171 ஆக இருந்த போதிலும், மீளாய்வாண்டிற்காக நியமனம் செய்யப்பட்ட 12,925 நொத்தாரிஸ்களிடமிருந்து அறவிடப்பட்ட வருமானம் ரூபா 14,438,837 மாத்திரமாக இருந்தது. 06 உயர் நீதிமன்ற வலயங்களில் பதிவு செய்யப்பட்ட 322 நொத்தாரிஸ்களிடமிருந்து எவ்வித வருமானமெதுவும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iv) 12 உயர் நீதிமன்றங்களிலிருந்து நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் மாதாந்த வருமான அறிக்கைகள் கொண்டு வரப்படாமையால் 10 உயர் நீதிமன்றங்களின் அறிக்கைகளை நீதி அமைச்சின் அறிக்கைகளுடன் ஒப்பிடும் போது ரூபா 403,737 வேறுபாடொன்று காணப்பட்டதன் காரணமாக ஆண்டில் சேகரிக்கப்பட்ட ரூபா 14,438,827 வருமானத்தின் சரியானதன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

---

25401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 224 ஊழியர்களிடமிருந்து அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,037,662 ஆக இருந்தது. அந்நிலுவை கடன் மீதிகள் 06 மாதங்கள் முதல் 30 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிலிருந்து இருந்து வந்தது. அந் நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

## 3.6 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.6.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக விரிவான கொள்வனவுத் திட்டமொன்றும் கொள்வனவு அட்டவணையொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6.2 உள்ளகக் கணக்காய்வு

பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்படாததுடன், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் உள்ளவாறான பதவியணி 04 உத்தியோகத்தர்களைக் கொண்டிருந்தது.

### 3.6.3. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

குறைந்தது காலாண்டிற்கு ஒருமுறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போ்து 2 தடவை மாத்திரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. அக்கூட்டங்களுக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பிரதிநிதி ஒருவரை அவதானிப்பாளராகப் பங்குபெறச் செய்வதற்கும் கணக்காய்வு அறிக்கைகளை மீளாய்வு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) ஏனைய நிறுவனங்களிலிருந்து கிடைத்த சொத்துக்களைப் பதிவேடுகளுக்கு உட்படுத்தப்படாமல் பயன்படுத்துதல்**

அரசின் வேறு 04 நிறுவனங்களினால் 2010–2014 காலப்பகுதியில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த பல வகைகளுக்குரிய 60 நிலையான சொத்து உருப்படிகள் மதிப்பீடு செய்யப்பட்டு சொத்துப் பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்**

திணைக்களத்தின் வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன், வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தினால் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி தீர்க்கப்படாதிருந்த ஓராண்டிற்கு குறைந்த காலமாக இருந்துவரும் ரூபா 25,544,674 பொறுப்புக்கள் காணப்பட்டன. நிதியாண்டில் சமர்ப்பிக்கப்படும் உரித்துக்கள் முடியுமான அளவில் அந்நிதியாண்டிலேயே செலுத்தி தீர்க்கப்பட வேண்டிய போதிலும், அப்பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 5,611,647 பெறுமதியான

பொருட்கள் மற்றும் அதற்குரிய பட்டியல்கள் திணைக்களத்திற்கு கிடைத்திருந்தும் அதற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியளவில் 06 செலவின விடயங்களுக்குரித்தாக சேமிப்புக்களை விஞ்சி ரூபா 3,928,334 ஆன பொறுப்புக்களுக்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

**3.8 இணக்கமின்மைகள்**

**3.8.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (i) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 2.11 ஆம் பந்தி | திணைக்களத்திற்குச் சொந்தமான 21 வாகனங்கள் தொடர்பாக 06 மாதங்களுக்கு ஒரு முறை வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (ii) 2013 செப்தெம்பர் 06 ஆந் திகதிய 162 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை | சிறு அளவிலான வழங்குனர்களுக்கு ரூபா 50 மில்லினுக்கு குறைந்த பட்டியல்களைத் தீர்வு செய்யும் போது பட்டியல் சமர்ப்பிக்கப்பட்ட திகதி முதல் 30 நாட்களுக்குள் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |

**3.9 செயலாற்றல்**

2015 இன் வருடாந்த மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயலாற்றல் அறிக்கையுடன் ஒப்பிடும் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

(அ) அதிகாரச்சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள் மூலம் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 11 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 04 செயற்பாடுகளுக்காக நிதி மற்றும் பௌதீக இலக்குகள் குறிப்பிடப்படாதிருந்தமையால் அச்செயற்பாடுகள் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்தனவா என உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) காணிப் பதிவாளர் அலுவலக நிர்மாணம்.

(ii) தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு

(iii) இயந்திர உபகரணங்கள் கொள்வனவு

(iv) எழுதுகருவிகள் மற்றும் ஏனைய உரிய பொருட்கள் கொள்வனவு

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 03 செயற்பாடுகள் முழுமையாக நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அச்செயற்பாடுகளின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்ற இலக்குகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) மாவட்ட மட்டத்தில் கேந்திரமயப்படுத்தப்பட்ட தரவுக் களஞ்சியமொன்றை ஸ்தாபித்தல்

(ii) மத்திய தரவுக் களஞ்சியமொன்றை ஸ்தாபித்தல்

(iii) தலைமை அலுவலகத்தின் கட்டிட நிர்மாணம் - 2 ஆம் கட்டம்

(இ) மீளாய்வாண்டினுள் 100,000 காணி உரித்துக்கள் பதிவுசெய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், பதிவு செய்வதற்காக 1,100,458 உரித்துக்கள் கிடைத்திருந்தன. அதில் உள்ளவாறாக 16,190 உரித்துக்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் செயன்முன்னேற்றம் 1.5 சதவீதம் ஆக இருந்தது.

## 3.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

### அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையிலிருந்து விலகுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தின் 20 பிராந்திய அலுவலகங்களுக்காக CCTV பாதுகாப்பு கமரா முறைமைகளை பொருத்துவதற்கான ரூபா 3,810,100 கொள்வனவிற்குத் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு விடயம் தொடர்பான அறிவினைக் கொண்ட அங்கத்தவரொருவர் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம் கணனிகள் கொள்வனவிற்காக ரூபா 5,000,000 நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், எல்லையை மிகைத்து ரூபா 12,185,200 செலவிடப்பட்டு கணனிகள் கொள்வனவு செய்ய்பபட்டிருந்தன.

## 3.11 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 ஆம் ஆண்டின் போது இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவராண்மையின் ஆலோசணையின் பேரில் பதிவாளர் நாயகத் திணைக்களத்தினால் பிரதேச செயலக மட்டத்தில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு விபரங்களைத் தரவு முறைமைக்கு உள்ளடக்குவதற்காக கணனி நிகழ்ச்சித்திட்டமொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. எனினும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலும் சில பிரதேச செயலகங்களிலும் அது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஹோமாகம காணிப் பதிவாளர் அலுவலகத்தின் உட்பிரிவு அறிக்கை தொடர்பாக பதிவாளர் நாயகத்தின் கையேட்டுடன் பரீட்சித்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) காணிப் பதிவாளர் அலுவலகத்தினால் தயாரிக்கப்பட்ட உட்பிரிவு அறிக்கை தாமதமின்றி ஒரு மாதத்திற்கு முன்னர் பதிவாளர் நாயகத்திற்கு

அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும், பத்து நொத்தாரிஸ்களுக்குரிய அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கு 03 ஆண்டுகள் முதல் 11 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்தது.

(ii) நொத்தாரிஸ்களால் மாவட்ட காணிப் பதிவாளர் அலுவலகத்திற்கு வாரப் பட்டியல் எதுவும் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அவ் அலுவலகங்களினால் வாரப் பட்டியல் தொடர்பாக விபரங்கள் பதிவுசெய்யும் பதிவேடும் பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) விவாக, பிறப்பு மற்றும் மரணச் சான்றிதழ்களின் இணைப் பிரதிகளைப் பாதுகாக்கும் நோக்கில் பராமரித்துச் சென்ற மாளிகாவத்த பதிவேட்டறைக் கட்டிடம் மற்றும் ஹோமாகம காணிப் பதிவாளர் அலுவலகத்தின் பதிவேட்டறை, அதன் ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளைப் பாதுகாக்கவும் பராமரிப்பதற்கும் முறைமையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மத்திய ஆவணக் காப்பகத்திற்காக தனியார் நிறுவனமொன்றிடமிருந்து நிழற்பட பிரதிகள் சேவையைப் பெற்றுக்கொண்டு அதற்காக அலுவலகத்தினுள் ஆவணங்களைப் பராமரிக்காமல் அந்நிறுவனத்தின் தரவுகளின் அடிப்படையில் 2012 சனவரி 01 ஆந் திகதி முதல் 2015 யூன் மாதம் வரையான காலப்பகுதியில் ரூபா 2,394,459 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதில் கூடுதலான நிழற்பட பிரதிகள் பதவிநிலை உத்தியோகத்தரின் அங்கீகாரமொன்றில்லாமல் பெற்றுக்கொண்ட அலுவலக கடிதங்களின் பிரதிகளாக அவதானிக்கப்பட்டதுடன், அக்கடிதங்கள் என்னவென்பது இனங்காண முடியாதமையால் ஆவணங்களின் பாதுகாப்பு சிக்கல்வாய்ந்ததாக இருந்தது.

**3.14 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 43 | 08 | 35 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 49 | 52 | 04 | 07 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,897 | 1,570 | 327 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 673 | 600 | 73 | - |
| (v) | ஏனையோர் (அமைய/ தற்காலிக /ஒப்பந்த அடிப்படை) | - | 01 | - | 01 |
| | மொத்தம் | **2, 662** | **2,231** | **439** | **08** |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

காணிப் பதிவாளர் / உரித்து பதிவாளர்களின் பதவிகளில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மிகைத்து 07 பேர் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன், அதற்காக முறையான அங்கீகாரமொன்றைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.